

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலக வளாகத்தில் ஆவின் பால் உற்பத்தியாளர்களுக்கு பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம், பால்வளத் துறை மற்றும் மேலாண்மை துறை இயக்குநர் டாக்டர் சு.வினீத், மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், ஆவின் மாவட்ட வருவாய் அலுவலர்/பொது மேலாளர் ரா.பேபி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டம், அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமுருகன்பூண்டி ஒன்றியம், கருவலூர் ஊராட்சி அண்ணா நகரில் ஜல் ஜீவன் திட்டத்தில் ரூ.12 இலட்சம் மதிப்பில் மேல்நிலை தொட்டி அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா தொடங்கி வைத்தார். இதில் மாவட்டக் கழக அவைத்தலைவர் க.நடராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சரவணன் நம்பி, ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.பழனிச்சாமி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி. அவினாசியப்பன் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் ஒன்றிய பகுதிகளில்

# ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

திருப்பூர், ஜூன் 30 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் ஒன்றியம், பெருமாநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ 1.58 கோடி மதிப்பீட்டில் அலுவலக அறை, தலைமை ஆசிரியர் அறை, கணினி அறை, வகுப்பறை, ஆய்வகம், நூலகம் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம், ஈட்டி வீரம்பாளையம் ஊராட்சி, கருக்கங்காட்டு புதூரில் ரூ.14.50 இலட்சம் மதிப்பீட்டில் மாகத்மா காந்தி தேசிய வேலை உறுதித்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட புதிய நியாய விலைக்கடை என மொத்தம் ரூ.1.72 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளை திறந்து வைத்து, பெருமாநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் கீழ் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள 5 குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட பிஸ்கட்களையும், 2022 2023 கல்வி ஆண்டில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவியர்களுக்கும், பொதுத்தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற 3 மாணவியர்களுக்கும், 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவியர்களுக்கும், தமிழ் திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற 3 மாணவியர்களுக்கு பரிசு மற்றும் கேடயங்களை வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, தொழிற்கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் 1000 ரூபாய் அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

நான் முதல்வன் திட்டத்தின் நோக்கம் தற்போது மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு 11, 12 ஆம் வகுப்புகள் முக்கிய மானவை, ஒருபுறம் பொது தேர்வுகளில் சிறப்பான தேர்ச்சி பெற வேண்டும். அதே நேரத்தில் நாம் என்ன செய்ய வேண்டுமோ, அதை நோக்கிய பயணத்தையும் திட்டமிட வேண்டும். இன்றைக்கு நம் கண்முன் இருக்கக் கூடிய சவால்களை விட அதிகபடியான வாய்ப்புகளும் உள்ளன. வழிகாட்ட பலரும் உள்ளனர்.

உங்களிடம் இருக்க வேண்டியதெல்லாம் ஒன்று தான். தன்னைத் தான் அறிதலின் முதல் கட்டத்தில் என்னவாக இருக்கிறோம் என்று யோசிப் பதைத்தான்டி என்னவாக ஆக விரும்புகிறோம் என்ற இலக்கை நோக்கிய பயணமே கனவுகள் மெய்ப்படும் காலத்திற்கும் வழிவகுக்கும். பள்ளியில் சமூக சீர்கேடுகள் நடந்து விடக் கூடாது என்ற அடிப்படையில் சிற்பி என்ற திட்டம் துவக்கி வைக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் காவல்துறை அதிகாரிகளும், பள்ளி ஆசிரியர்களும் பள்ளிக்குச் சென்று மாணவர்களை சமூக ரீதியாக ஒழுங்கபடுத்தப்படுகிறது. அதேபோல பள்ளி. மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் இந்த திட்டம் திருப்பூர் மாவட்டத்தில் குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தில் 76 பள்ளிகளிலே 1,429 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இல்லம் தேடிக் கல்வி திட்டத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் கற்றல் மதிப்பீடு குறிப்பிட்ட கால அளவில் ஆய்வு செய்யப்படுகிறது. மாணாக்கர்களின் கற்றல் மதிப்பீட்டிற்கு ஏற்றவாறு தன்னார்வலர்களின் கற்பிக்கும் திறன் மேம்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது இத்திட்டம் தினசரி மாலை 5 முதல் 7 மணி வரை தன்னார்வலர்களைக் கொண்டு மாணவ, மாணவியர்களின் குடியிருப்புப் பகுதிகளிலேயே எளிய முறையில் கற்றல் வாய்ப்புகளை வழங்கிடுவதன் மூலம் மாணவ, மாணவியர்களின் இடைநிற்றல் குறைக்கப்பட்டு, கற்றல் திறன் மேம்பாடு அடைந்துள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் பாலமுரளி, மாவட்ட திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்) த.ஸ்டெல்லா, திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜோதி, ஸ்ரீதர், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.விஸ்வநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ் ஊராட்சிமன்ற தலைவர்கள் பெருமாநல்லூர் சாந்தாமணி வேலுசாமி , கணக்கம்பாளையம் சண்முகசுந்தரம், கிளை கழக செயலாளர் சிடிசி வேலுசாமி உள்பட ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திட்டக்குழு தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு தலைமையில்

# திருவாரூர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்றனர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி - பாராட்டு!

திருவாரூர், ஜூன் 30 -

திருவாரூர் மாவட்ட திட்டக்குழு தலைவராக பொறுப்பேற்றுக்கொண்ட தலையாமங்கலம் ஜி.பாலு உடன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டக்குழு உறுப்பினர்களும் பொறுப்பேற்றுக்கொண்டதையடுத்து திட்டக்குழுவின் முதல் அறிமுக கூட்டம் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது.

திருவாரூர் மாவட்ட திட்டக்குழுவுக்கான தேர்தலில் போட்டியின்றி 12 உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டிருந்த நிலையில், திட்டக்குழு தலைவராக மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலுபொறுப்பேற்று கொண்டார். இந்த நிலையில் திட்டக்குழுவின் முதல் கூட்டம், திட்டக்குழு தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலுவின் தலைமையிலும், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், கே. மாரிமுத்து, எம்.செல்வராஜ்எம்.பி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அப்போது திட்டக்குழு உறுப்பினர்களாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட சேகர் கலியபெருமாள், இரா.சங்கர், அமுதா, சங்கீதா, முகமது உஸ்மான், ரமேஷ், ராணி, ராஜேஸ்வரி, ஷோபா, செந்தில்குமார், எ.என்.ஆர்.பன்னீர் செல்வம், தமயந்தி ஆகியோருக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் முற்றிலும் விவசாயம் சார்ந்த மாவட்டமாக திகழும் திருவாரூர், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் , தமிழ்நாடு முதல்வர் முக. ஸ்டாலின் ஆகியோரின் சொந்தமாவட்டமாக விளங்கும் பெருமைக்குரியதால் அரசின் அனைத்து திட்டங்களையும் பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் கொண்டு சேர்க்கமுழு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் , இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை கொண்டு செல்லும் நமது முதல்வருக்கு திருவாரூர் மாவட்ட ஊராட்சி உறுதுணையாக இருந்து செயலாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும் தமிழ்நாட்டில் திட்டக்குழு தேர்தலை நடத்தி அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்ட தமிழ்நாடு முதலவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நகர் மன்ற தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

### சாக்கோட்டை அன்பழகன் சகோதரர்

# க.உண்மை மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!

தஞ்சாவூர் ஜூன்.29.

கும்பகோணம் பெரியார் பெருந்தொண்டர் மறைந்த கணபதி - ஏகாம்பாள் இளையமகனும், கும்பகோ



ணம் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் மறைந்த க.பொன்னாட்ஷா, சாக்கோட்டை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் க.ஆனந்தம், க.திராவிட அரசு, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோரின் இளைய சகோதரரும், வழக்கறிஞர் உ.கரிகாலன் அவர்களின் தந்தையுமான க. உண்மை நேற்று முன்தினம் (28.06.2023) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, செ.இராமலிங்கம் எம்.பி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் எம்.எல்.ஏ, தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர், தணை மேயர் சு.ப.தமிழழகன் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (29.06.2023) வியாழன் மாலை 04.00 மணிக்கு கும்பகோணம், சாக்கோட்டை அவரது இல்லத்திலிருந்து புறப்படுகிறது.



நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு மக்கள் நேர்காணல் முகாமில் வேளாண்மை துறை சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வழங்கினார். உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், நாகை சட்டமன்ற உறுப்பினர் முகமதுஷாநவாஸ், நாகை நகர்மன்றத் தலைவர்கள் இரா.மாரிமுத்து, ஒன்றியக் கழகச் செயலாளர் செல்வ.செங்கட்டுவன், சிக்கல் என்.ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.

# நடராஜர் கோவிலை தீட்சிதர்கள் தங்கள் கம்பெனியாக மாற்றிவிட்டனர்!

## அமைச்சர் சேகர்பாபு குற்றச்சாட்டு!



சென்னை, ஜூன் 30 -

“சிதம்பரம் நடராஜர் கோயிலை தங்களுடைய கம்பெனியாக தீட்சிதர்கள் மாற்றிவிட்டதாகவும் கோவிலில் ஒரு உண்டியலை கூட பார்க்க முடியவில்லை” என்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறியுள்ளார். சென்னையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு செவ்வாய்க் கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது:

“சிதம்பரம் திருக்கோயிலில், ஓர் அதிகார மையத்தை ஏற்படுத்திக் கொண்டு தீட்சிதர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசைப் பொறுத்த வரையில், வழிபாட்டு முறைகளில், ஆதிகாலம் தொட்டு என்ன வழி பாட்டு முறைகள் பின்பற்றப்படு கிறதோ, அதில் துளியளவுகூட இந்து சமய அறநிலையத் துறை தலையிட்டு வழிபாட்டு முறைகளை மாற்றுகின்ற எண்ணம் இல்லை. அதே நேரத்தில், திருக்கோயில்கள் மன்னர்கள் காலத்தில் கட்டப் பட்டது. அதை டினாமினேஷன் டெம்பிளாக (சமயக் கோயில்) அறிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடர்ந்து இது போன்ற சர்ச்சைகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களுடைய நன்கொடைகளால் இந்த கோயில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த கோயிலில் ஒரு உண்டியல்கூட இல்லை. மற்ற கோயில்களில் பல உண்டியல்கள் இருக்கும். வரவு செலவு இருக்கும். இந்த கோயிலை இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து எடுக்கின்றபோது, அன்று கோயிலில் இருந்த ரொக்கப் பணம் எவ்வளவு என்பதை தணிக்கை செய்வதற்குகூட இதுவரை அவர்கள் அனுமதிக்க மறுக்கிறார்கள்.

அதேபோல், விலை மதிப்புள்ள தங்க நகைகள், திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆபரணங்கள், தீட்சிதர்கள் திருக்கோயிலுக்கு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுநாள் வரையில், எவ்வளவு தங்க நகை வரவு வைக்கப்பட்டுள்ளது என்ற கணக்கைக்கூட அவர்கள் காண்பிக்க மறுக்கின்றனர். மேலும் இந்த காலகட்டங்களில் திருக்கோயிலின் வரவைப் பற்றி எந்தவிதமான தகவலையும் தெரிவிக்க மறுக்கிறார்கள். அந்தக் கோயிலை ஏதோ அவர்களுடைய சொந்த நிறுவனம் போல் பாவித்துக் கொண்டுள்ளனர்.

இதைத்தான் அரசு தட்டிக்கேட்கிறது. மக்கள் பணத் தால், மக்களுடைய முழு அர்ப்பணிப்பால் நடக்கின்ற இத்திருக்கோயிலில், மக்களுக்கும் அரசுக்கும் சேர்க்க வேண்டிய வெளிப்படையான தகவல் களைக் கூட கொடுக்க மறுக்கிறார்கள். கனகசபையின் மீதேறி பக்தர்கள் வழிபடுவது குறித்து இந்துசமய அறநிலையத்துறை முடிவெடுக்கலாம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் அறநிலையத்துறை சார்பில், கனகசபையின் மீதேறி பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று அரசு ஒரு ஆணையை பிறப்பித்திருக்கிறது ஆனால், அவர்கள் திருமஞ்சனத்தைக் காரணம் காட்டி, ஜூன் 24 முதல் 27 வரையிலான 4 நாட்களுக்கு அனுமதி மறுக்கின்றனர்.

அவர்கள் இவ்வாறு கூறுவதற்கு எந்த நடை முறையும் இல்லை. எனவே, இந்த 4 நாட்களும் நீதி மன்றத் தீர்ப்பின்படி, அரசாணையின் படி, கனகசபையின் மீதேறி பக்தர் கள் தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### நிலங்களைக் குத்தகைக்கு வழங்கியவர்கள் மூலம்

# தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலுக்கு ரூ.19.86 லட்சம் வருவாய்!

## அரசின் செய்திக்குறிப்பில் தகவல்!

சென்னை, ஜூன் 30 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுக்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு மீட்கப்படும் சொத்துக்களை திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டும் வகையில் ஏலத்தின் மூலம் குத்தகைக்கு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தின்கட்டுப்பாட்டின் கீழுள்ள புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான சுவாதீனம் பெறப்பட்ட 226.54 ஏக்கர் நிலத்தினை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் திருக்கோயிலுக்கு ரூ.19,86,389/ வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமாக அருள்மொழிப் பேட்டை கிராமத்தில் 237.47 ஏக்கர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் விவசாயக் கூட்டுறவு சங்கத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அக்கூட்டுறவு சங்கம் செயலிழந்து போன சூழலில் திருக்கோயிலுக்கு பெரும் வருமான இழப்பு ஏற்பட்டதை தொடர்ந்து அந்த நிலங்களை திருக்கோயில் நிர்வாகம் நீதிமன்றம் மூலம் சுவாதீனம் எடுத்து ஏலம் விட நடவடிக்கை மேற்கொண்டது.

இந்த ஏலத்தை நடத்த தடைகோரி இராமதாஸ் மற்றும் 9 நபர்கள் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்த நிலையில் தஞ்சாவூர் காவல் துணை கண்காணிப்பாளர் ஏலம் நடத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றம் மதுரை கிளை உத்தரவிட்டதைத் தொடர்ந்து, 2023 ஜீன் மாதம் 23, 26 மற்றும் 27 ஆகிய தினங்களில் திருக்கோயிலுக்குச் சொந்தமான 226.54 ஏக்கர் நிலம் ஆண்டு குத்தகைக்கு ஏலம் விடப்பட்டதன் மூலம் ரூ.19,86,389/ கிடைக்கப் பெற்றுள்ளது. இந்நிதியின் மூலம் திருக்கோயில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் க. மகாராசன்

### ஜூன் 30 (2014)



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

துறையூர் நகரத்தில் மாவட்ட பிரதிநிதியாகவும், அதன் பின்னர் இருபத்தோறு ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

1986–ல் நகர்மன்றத் தலைவராகவும், 2006–ல் நகர்மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**